**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 158/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 9<br>Defense<br>Court |
| Name | மாரியப்பன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the $28^{th}$ day of January 2020.

நான் தற்போது திருக்குறுங்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் மூன்றடைப்பு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 25.02.2009ம் தேதி தலைமைகாவலர் 2453 முருகன், எனது பார்வைக்கு வைத்த மூன்றடைப்பு காவல்நிலைய குற்ற எண்.22/2009 பிரிவுகள் 452, 294(பி), 323, 506(2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4-ன்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இடத்திற்கு 23.30 மணிக்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் இசக்கிகோனார், சந்தியா ஆகியோர் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7. அதே சாட்சிகள் முன்பு சம்பவ இடத்தில் வைத்து எதிரிகள் வாதியை தாக்குவதற்கு பயன்படுத்திய சுமார் 25 செ.மீ நீளமுள்ள மண்வெட்டி கனை கம்பு ஒன்று, சுமார் 16 செ.மீ நீளமுள்ள கைப்பிடியுடன் உள்ள அருவாள் ஒன்றினையும் அத்தாட்சி மூலம் அதே தேதியில் 23.45 மணிக்கு கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.8. பார்வை மகஜர் கைது செய்த சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் வைத்து சம்பவத்தை நேரில் பார்வையிட்ட இசக்கி, சடாமணி, இசக்கிகோனார் வழக்கு பதிவு செய்த தலைமைகாவலர் முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கிடைத்த தகவல்படி வழக்கின் எதிரிகளான மேற்படி எதிரிகளை 26.02.2009ம் தேதி 00.30 மணிக்கு பொன்னாக்குடி விலக்கில் வைத்து மேற்படி எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் சாட்சிகள் இசக்கியம்மாள், சீனிகோனார் மனைவி இசக்கியம்மாள், மணி ஆகியோர்களை

பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.9. சுமார் 25 செ.மீ நீளமுள்ள மண்வெட்டி கனை கம்பு ஏற்கனவே சா.பொ.1 ஆகவும், சுமார் 16 செ.மீ நீளமுள்ள கைப்பிடியுடன் உள்ள அருவாள் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 23.03.2009ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் சீனிகோனார் மனைவி இசக்கியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். அந்த காயசான்றிதழ் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவர் சீனிகோனார் மகன் இசக்கி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார். அந்த காயசான்றிதழ் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவர் மணி மனைவி இசக்கியம்மாள் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். இவ்வழக்கின் எனது விசாரணையிலிருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரிகள் மீது 452, 294(பி), 325, 506(2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4-ன்படி இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு மறுக்கப்பட்டது.